LIBRARY
29 MAR 1965
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Wednesday, 20th January 1965

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at half past eight of the clock. Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

கோயில் சடங்குகளைப் படம் எடுத்தல்

*16 கேள்வி.—திரு. கே. ஏ. மதியழகன் (திரு. மு. கருணாநிதி சார்பாக): கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோயில்களின் உள்ளே நடைபெறும் சடங்குகளை சினிமாப்படம் பிடிக்கக்கூடாது என்று அரசினர் ஏதேனும் உத்திரவு பிறப்பித்துள்ளனரா?

(இ) ஆமெனில் காரணமென்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Yes.

(b) As the filming of the rites and rituals that take place in the Sanctum Sanctorum of the temple would offend the religious feelings and sentiments of worshippers, the Government have issued orders prohibiting the filming of those ceremonies in the temple.

திரு. கே. ஏ. மதியழகன்: கோவில்களில் சடங்குகள் நடைபெறும் பொழுது மட்டும் படம் பிடிக்கக்கூடாது என்று தான் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறதா? அல்லது கோவில்களில் இருக்கிற சிற்பங்கள், வேறு வகையான மண்டபங்கள் இவைகளையெல்லாம் கூட மற்ற நேரங்களிலும் படம் பிடிக்கக்கூடாது என்று தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சடங்குகள் உள்ளே நடைபெறுகின்றன. வெளியிலேயும் நடைபெறுகின்றன. உள்ளே நடைபெறுகின்ற சடங்குகளை படம் பிடிக்கக்கூடாது என்பது ஒரு தடை மற்றொன்று, கர்ப்பகிரஹத்தில் ஆங்கிலத்தில் sanctorum என்று சொல்லுவார்கள்—படம் பிடிப்பதும் அனுமதிக்கப் படுவதில்லை.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை: பெரிய புராதன கோவில்களில் நடைபெறும் உத்ஸவங்கள் படம் எடுக்கப்பட்டிருக்கிறதே, அவைகளை வெளியிடுவதற்கு அரசாங்கம் என்ன ஏற்பாடு செய்திருக்கிறது?

[20th January 1965

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அந்தப் படங்கள் வேறு ஒரு படத்தோடு சேர்த்து வெளியிடப்படவேண்டியிருக்கிறது. விவேகானந்தர் படத்தையும் இதையும் சேர்த்து இணைத்து வெளியிடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : நம்முடைய திராவிட சிற்ப கலையினுடைய சிறப்பை வெளிநாட்டவர்கள் தெரிந்துகொள்வதற்கு நம்முடைய கோவில்களில் உள்ள சிற்பங்களை படம் பிடிக்க வேண்டும் என்று கேட்டால், அதற்கு அனுமதி கொடுக்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சிற்பக் கலைகள் கர்ப்ப கிரஹத்தின் உள்ளே இல்லை. ஆகையினால் வெளியிலே இருக்கிற சிற்பக் கலைகளை படம் பிடிப்பதற்கு தடை இருக்காது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கர்ப்பகிரஹத்தில் நடக்கக்கூடிய சடங்குகளை படம் பிடித்து வெளியிலே காட்டுவதினால் மக்கள் அவற்றை அறிந்துகொள்ளக்கூடாது என்பது அரசாங்கத்தின் எண்ணமா? அப்படி அறிந்துகொண்டால் மக்களுடைய தெய்வ பக்தி குறைந்துவிடும் என்று எண்ணுகிறார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அறிந்து கொள்ளவேண்டிய மக்கள் நேராகப் பார்த்து அறிந்து கொள்ளுவார்கள். அப்படி பார்ப்பதற்கு அக்கரை இல்லாதவர்கள் அறிந்து கொள்ளவேண்டியதில்லை. பார்ப்பதற்கு அக்கரை இல்லாதவர்கள் படம் பிடித்துக் காட்டினால் கூட அதை பரிகாசம் செய்வார்கள். அதனால் உண்மையான பக்தர்களின் மனம் புண்படும்.

திரு. ஜே. மாதா கவுடர் : நண்பர் மதியழகன் அவர்களுக்கு கோவில் மீது எப்பொழுது முதன் முதலில் பற்றுதல் ஏற்பட்டது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: மன்றத்திற்கு வெளியிலே நேராகப் பார்த்து சந்தித்துக் கேட்டுக்கொள்ளலாம்.

கனம் சபாநாயகர் : கோவில்களிலே சந்தித்துக்கொள்ளலாம்.

கோயில்களில் கண்காட்சி சாலை

* 17 **கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை**: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நம் மாநிலத்தில் எந்தெந்தக் கோயில்களில் கண்காட்சி சாலைகள் இருக்கின்றன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The following two temples are maintaining museums :—

1. Ranganathaswami Devasthanam, Srirangam, Tiruchirappalli.

2. Sri Kallalagar Devasthanam, Alagarkoil, Melur taluk, Madurai district.